
# காரியம் மாறுதலாய் முடியும்



நம் அனைவருக்கும் வேதாகமத்தில் உள்ள எஸ்தர் புத்தகத்தை பற்றி நன்கு தெரியும். இஸ்ரவேல் மக்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டு போய் அங்கு அடிமைகளாய், அந்நியர்களாய் வாழ்ந்த காலம் அது. முதலாவது பாபிலோனிய சாம்ராஜ்யமும், பிறகு மேதிய பெர்சிய சாம்ராஜ்யமும் ஆண்டது. இந்த மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் ஆண்ட காலத்தில், நடைபெற்ற சம்பவமே எஸ்தர் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தின் ஒரு சிறப்பு, நமது இந்திய தேசத்தின் பெயரை குறிப்பிட்டே இந்த புத்தகம் ஆரம்பம் ஆகிறது. இதில் பல்வேறு காரியங்கள் குறிப்பிடபட்டிருந்தாலும், எஸ்தர், மொர்தெகாய், அகாஸ்வேரு ராஜா, ஆமான் என்ற நான்கு நபர்களை சுற்றியே புத்தகம் முழுவதும் காணப்படுகிறது. இப்புத்தகத்தில் கர்த்தர் என்ற வார்த்தையோ, ஆண்டவரை பற்றியோ வெளிப்படையாக எந்த அதிகாரத்திலும் கூறப்படவில்லை. ஆனால் அதில் நிகழும் ஒவ்வொரு காரியமும், ஆண்டவரின் சித்தத்தின்படி, அநாதி திட்டத்தின்படி அற்புதமாய் நடப்பதை நாம் காணலாம். பயங்கரமான நெருக்கத்தின் மத்தியில் சென்ற எஸ்தரும், மொர்தெகாயும், அகாஸ்வேரு ராஜ்யம் முழுவதும் இருந்த யூதர் அனைவரும், தாங்கள் எந்த நாளில் தங்கள் சத்துருக்களால் அழிக்கப்படுவோம் என்று நினைத்தார்களோ, அதே நாளில் தங்கள்

சத்துருக்களை மேற்கொள்ளவும், அழிக்கவும், விருந்துண்டு பண்டிகை கொண்டாடுகிற நாளாய் அது மாறவும், இப்படியாக காரியம் மாறுதலாய் முடிய காரணம், எஸ்தரும், மொர்தெகாயும், மற்ற யூதரும் மூன்று நாள் செய்த உபவாசம் ஆகும். இங்கு அவர்கள் (யூதர்கள்) உபவாசம் இருந்து வேண்டியது சர்வ வல்லமையுள்ள கர்த்தரை நோக்கியே ஆகும்.

எஸ்தர் புத்தகத்தில் மூன்றாம் அதிகாரத்தில், ஆமான் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பாகவே, எஸ்தர் இராஜாத்தியாக்கப்படுவது, ஆமான் மூலமாய் சோதனை உண்டாவதற்கு முன்னரே, அதை முறியடிக்க, தேவன் எஸ்தரை இராஜாத்தியாக்கினார். இன்றைய சூழ்நிலையிலும் நம் இந்திய தேசத்தில், தேவ பிள்ளைகளுக்கு எதிராக சத்துருவானவன் அதிகாரத்தின் மூலமாய் செயல்படுகிறான். ஆனால் எஸ்தரை போல் இந்நாளிலும், ஆமானின் துஷ்ட தனத்தை முறியடிக்க ஆண்டவர் தம் பிள்ளைகளை எழுப்பி கொண்டு இருக்கிறார்.

**எஸ்தர் 3:1-6** வசனங்களில், "**இந்த நடபடிகளுக்குப்பின்பு, ராஜாவாகிய அகாஸ்வேரு அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியனை மேன்மைப்படுத்தி, தன்னிடத்திலிருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனுடைய ஆசனத்தை உயர்த்திவைத்தான். ஆகையால் ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் எல்லாரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள்; அவனுக்கு இப்படிச் செய்யவேண்டும் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான்; ஆனாலும் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை. அப்பொழுது ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் மொர்தெகாயைப் பார்த்து: நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன என்று கேட்டார்கள். இப்படி அவர்கள் நாளுக்குநாள் அவனுடனே சொல்லியும், அவன் தங்களுக்குச் செவிகொடாதபோது, தான் யூதன் என்று அவன் அவர்களுக்கு அறிவித்திருந்தபடியால், மொர்தெகாயின் சொற்கள் நிலைநிற்குமோ என்று பார்க்கிறதற்கு, அதை ஆமானுக்கு அறிவித்தார்கள். ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது, மூர்க்கம் நிறைந்தவனானான். ஆனாலும் மொர்தெகாயின்மேல்மாத்திரம் கைபோடுவது அவனுக்கு அற்பக்காரியமாகக் கண்டது; மொர்தெகாயின் ஜனங்கள் இன்னாரென்று ஆமானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபடியால், அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான்**.".

ஆமானின் துஷ்ட தனத்திற்கு காரணம், மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை. இராஜா கட்டளையிட்டிருந்த பொழுதிலும், ராஜாவின் ஊழியக்காரர், "**நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன**" என்று பலமுறை கேட்டபொழுதும், மொர்தெகாய் கூறிய ஒரே பதில் தான் ஒரு யூதன் என்பதாகும். ஜீவனுள்ள தேவனை அன்றி வேறு எதையும் வணங்க, நமஸ்கரிக்க முடியாது, அதற்காய் இராஜாவின் கட்டளையை மீறவும் அவர் தயாராய் இருந்தார். இராஜாவின் கட்டளை அனைத்தும், தேச சட்டத்தின்படி அமைக்கப்பட்டு, மீறபடுமானால், கடுமையான் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று வஸ்தியின் விசயத்தில் நடந்ததை மொர்தெகாய் அறிந்திருந்தும் அவர் தேவனுக்காய் வைராக்கியம் பாராட்டினார்.

இன்றைய காலகட்டத்திலும், இந்திய தேசத்தில் வாழும் நமக்கும் இதே நிலைதான். தேவனுக்கு விரோதமான காரியங்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் மூலம் சட்டமாக்கப்பட்டு, அதை நடைமுறைப்படுத்த, துஷ்ட ஆமானை போன்றவர்கள் முயல்கின்றனர். தேவ பிள்ளைகள் தேவனை ஆராதிப்பதை விட்டு, அவரை தெய்வமாக கொண்டிருப்பதை விட்டு, தாங்கள் காட்டினதிற்கு அவர்கள் அடிபணிய வேண்டும் என்ற நோக்கத்தோடு, அன்று சிறுபான்மையினராய் இருந்த யூதர்களை போல, இன்று சிறுபான்மையினராய் இருக்கும் கிறிஸ்தவர்களாகிய நம்மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. அன்று இராஜாவின் ஊழியகாரர் கூறியது போல, இன்று கிறிஸ்தவர்களை பார்த்தும், இதுதான் சட்டம் இப்படித்தான் நீங்கள் வாழ வேண்டும். இதைதான் தொழுதுகொள்ள வேண்டும் என்று அதிகாரத்தை கையில் வைத்துள்ளவர்கள் கூறினாலும், அதை மீறினால் தேச துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டாலும், நாம் மொர்தெகாயை போல தைரியமாய் ஆண்டவருக்காய் வைராக்கியம் பாராட்ட வேண்டும். துஷ்ட ஆமான், இராஜாவிடம் நயவஞ்சகமாய் பேசி, யூதர்களின் அழிவிற்கு நாள் குறித்தான். **(எஸ்தர் 3:7-15).**

**எஸ்தர் 4:1-3** வசனங்கள் கூறுகிறது "**நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அறிந்தபோது, மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப்போய், துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக்கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்புமட்டும் வந்தான்; இரட்டுடுத்தினவனாய் ராஜாவின் அரமனை வாசலுக்குள் பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லை. ராஜாவின் உத்தரவும் அவனுடைய கட்டளையும் போய்ச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் ஸ்தலத்திலுமுள்ள யூதருக்குள்ளே மகா துக்கமும், உபவாசமும், அழுகையும், புலம்பலும் உண்டாய், அநேகர் இரட்டுடுத்திச் சாம்பலில் கிடந்தார்கள்.**",

இதை போன்ற ஒரு சூழ்நிலை இன்று நம் தேசத்தின் தேவ மக்களிடமும் நிலவுகிறது. இதில் மேலும் ஒரு கொடூரமான காரியம் என்னவென்றால் இந்தியர்களாகிய நாம், நம் சுய தேசத்தில் வாழ்ந்தும், கிறிஸ்தவ மிஷனரிகள் மற்றும், நம் முன்னோர்கள் இந்நாட்டிற்காய் பல நல்ல காரியங்களை (கல்வி, மருத்துவம்) செய்தும், தேசத்தின் உண்மையான சட்டம் நமக்கு சகல உரிமைகளையும், மத சுதந்திரத்தையும் கொடுத்திருந்தும், துஷ்ட ஆமான்களால் திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம், ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களும், சட்டத்தை காப்பாற்ற வேண்டிய நீதித்துறையும் இன்று கைகோர்த்து தேவ பிள்ளைகளுக்கு துன்பத்தை ஏற்படுத்துகின்றன.

ஆனால் நாம் வெறுமனே மொர்தெகாயை போல அழுதுகொண்டிராமல், எஸ்தர் கூறியதை போல, தேவ பிள்ளைகள் அனைவரும் சபை பாகுபாடின்றி ஒரே குரலாய் உபவாசத்தோடு பரலோக தேவனை நோக்கி பார்க்க வேண்டும். அப்பொழுது நிச்சயமாய் நமக்கு ஏதாவது ஒரு விதத்தில் ஆண்டவர் சகாயம் அருள்வார். அகாஸ்வேரு இராஜாவின் மனதையோ அல்லது அகாஸ்வேரு இராஜாவையே மாற்ற தேவன் வல்லமையுள்ளவர். நிச்சயமாய் எந்த இடத்தில் தேவ பிள்ளைகள் நசுக்கப்படுகிறார்களோ, அதே இடத்தில் சத்துருவின் தலை நசுக்கப்படும், எந்த நாளை குறித்து யூதர்கள் பயந்தார்களோ, அதே நாளில் அவர்கள் தங்கள் சத்துருக்களை மேற்கொண்ட்து போல, நம் இந்திய தேசத்திலும் எந்த இடத்தில் எல்லாம் எதிர்ப்புக்கள் அதிகமாய் இருக்கிறதோ, அதே இடத்தில் தேவ பிள்ளைகளை அலை அலையாக தேவன் எழுப்புவார்.

அன்று இந்திய தேசம் உள்பட அகாஸ்வேரு அரசாண்ட 127 நாடுகளில் இருந்த யூதர்களை காட்டிலும் அதிகமாய் மக்கள் வாழும் நம் நாட்டில் நிச்சயமாய் ஒரு எழுப்புதல் ஏற்படும். ஆண்டவரை நம்பாமற் போன தோமாவிற்கு, இரண்டாவது முறையாய் காட்சியளித்து அவரது விசுவாசத்தை திடப்படுத்தி, அவரை இந்திய தேசத்திற்கு அனுப்பி, குறிப்பாக தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை பட்டினத்தில் இரத்த சாட்சியாக 2000 வருடத்திற்கு முன்பாக மரிக்க, ஆண்டவர் சித்தம் கொண்டிருப்பாரானால், நிச்சயமாக ஆண்டவர் நம் சென்னை பட்டணத்தையும், தமிழ்நாட்டையும், இந்திய தேசத்தையும் பற்றி மேலான ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். எனவே நாம் பயப்படாமல் எஸ்தரை போல, மொர்தெகாயை போல தைரியமாய் ஆண்டவருக்காக வைராக்கியம் பாராட்ட வேண்டும். வெறும் 127 நாடுகளை மட்டும் சில காலம் ஆண்டு, பின்பு மறைந்து போன அகாஸ்வேரு இராஜாவை காட்டிலும், அண்ட சராசரங்களையும் உண்டாக்கி அதை தமது ஆளுகைக்குள் வைத்திருக்கும் இராஜாதி இராஜாவான தேவனை

நம்பியிருக்கும் நாம், எஸ்தர் அகாஸ்வேருவிடம் மன்றாடியதை போல, நாமும் ஆண்டவரிடம் மன்றாடும் பொழுது **நிச்சயமாய் காரியம் மாறுதலாய் முடியும்**. எனவே இன்றைய கால அரசியல் மற்றும் சமூக சூழ்நிலையை குறித்து கவலைப்படாமல் தைரியமாய் முன்னேறுவோம். தேசத்தை ஆண்டவருக்காய் சுதந்தரிப்போம். ஆமென், அல்லேலூயா.